# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சூச] யாழ்ப்பாணம்:- நந்தன ஹூ ஐப்பசி மீ ௩௨ செவ்வாய்க்கிழமை (21 Octo. 1952) [இல - ௩௨]


# ஒழுங்கு படுத்தப்பெற்ற வாழ்க்கை

### ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பட்டமளிப்பு விழா

இச்சங்கத்தின் பட்டமளிப்பு விழாவும் 29-வது ஆண்டு நிறைவுவிழா வருடாந்தக் கூட்டமும் டிசெம்பர் மாதம் 1-ம் 2-ந் திகதி திங்கள் செவ்வாய் வாரங்களில் (1,2-12 52) யாழ்ப்பாணத்தில் நடைபெறும். முதலாம்நாள இரவு புகழேந்திப்புலவர் நாடகம் சங்கத்தரால் நடிக்கப்படுமென்றும் அங்கத்தவர்கள் நவம்பர் மாதம் 15-ந் திகதிக்கு முன் சென்ற ஆண்டுக்கும் இவ்வாண்டுக்குமுரிய சந்தாப்பணத்தை அனுப்பி வைக்கவேண்டுமென்றும் சங்கக் காரியதரிசி திரு. அ. சரவணமுத்து அவர்கள் அறிவிக்கின்றார்.

### யோகி சுத்தானந்தபாரதியார் வரவேற்பு

வைத்தீஸ்வர வித்தியாலயத்திலே Dr. C. குருசாமி அவர்கள் தலைமையில் நடந்த சுத்தானந்த பாரதியார் வரவேற்புக் கூட்டத்திலே பாரதியார் அவர்களை வவுனியாவிலே வரவேற்ற வேண்டியன செய்தல் வேண்டுமென்று தீர்மானிக்கப் பெற்றது.

யாழ்ப்பாணப் பட்டினசபை வரவேற்புடன் ஒரு பகிரங்க வரவேற்பும் நடைபெறும். பாரதியார் அவர்கள் சைவபரிபாலனசபை நாவலர் மண்டபத்திலே ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானது திருவுருவப்படமொன்றைத் திறந்து வைப்பார்கள். வட இலங்கை ஆசிரியர் சங்கமும் பாரதியார் அவர்களை வரவேற்க ஒழுங்குசெய்வதாயறிய வருகின்றது.

## உலகசமாதானத்துக்கு உறுதுணை

மகாத்மா காந்தியடிகளின் 84-வது பிறந்த தினமாகிய 2—10—52 வியாழக்கிழமை மாலை நீர்வேலியில் அகில இலங்கைக் காந்திய சேவா சங்கப் பயிற்சி நிலையமான "சர்வோதய ஆச்சிரமம்" ஆரம்பிக்கப்பட்டது. திருகோணமலை — காந்தி ஆசிரியர் திரு. பொ. கந்தையா அவர்கள் ஆச்சிரமத்தை ஆரம்பித்து வைத்துப் பேசியதன் சாராம்சமாவது:—

அன்புமிக்க தாய்மார்களே! பெரியோர்களே! பிள்ளைகளே! உங்களெல்லாருக்கும் என் அன்பான வந்தனம் உரியதாகுக. காந்தியடிகள் பிறந்த தினமாகிய எண்பத்துநான்காவது சர்க்கா ஜெயந்தி நாளாகிய இன்று நாம் இங்கு கூடியிருப்பது ஒரு நல்ல காரியத்தை ஆரம்பித்து வைத்தற்கேயாம். இக்கிராமத்து மக்களுடன் பல கிராமங்களிலிருந்து வந்த நீங்களும் சேர்ந்திருப்பது ஒற்றுமைக்கு ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது. இப்பரந்த கூட்டத்தின் மத்தியில வயதிலும் அறிவிலும் அநுபவத்திலும் குறைந்த என்னை இவ்வாச்சிரமத்தைத் திறக்கும்படி பணித்தீர்கள் நான் இதற்குத் தகுதியற்றவனென்றாலும் உங்கள் அன்பான உத்தரவுக்குப் பணிந்து கடவுள் திருவருளை முன்னிட்டு இவ்வாச்சிரமத்தைத் திறந்து வைக்கிறேன்.

### ஆச்சிரம வாழ்க்கை

ஆச்சிரமம் என்றதும் துறவிகள் முனிவர்களுடைய ஞாபகமே பலருக்கு வருகிறது. சாதாரண மக்கள் ஆச்சிரம வாழ்வு தங்களுக்குரிய தல்ல என்ற முடிவு கட்டிக்கொள்வதுடன் அதனிடமிருந்து விலகி ஒருபுறம் ஒதுங்கியும் விடுகின்றனர். இந்த எண்ணத்தை இந்த ஆச்சிரமம் மாற்றும் போதுதான் இது மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். ஆச்சிரமம் சாதாரண மக்களுக்குரியதேயன்றி நவநாகரீகக்காரர்களுக்குரியதன்று. ஆச்சிரமம் என்று அழைக்கப்படாவிட்டாலும் சாதாரண வறிய மக்கள் பலர் ஆச்சிரம வாழ்க்கையையே நடத்துகின்றனர். அவர்களது சிறு குடில் ஆச்சிரமமாகவே விளங்குகின்றது. சாதாரண மக்கள் இந்த ஆச்சிரமத்தைத் தங்கள் சொந்த வீடாகக் கருதித் தமக்கு வாழ்வளிக்கும் தாயகமாகக் கருதித் தங்கு தடையின்றி, எவ்வித பயமுமின்றி அடிக்கடி இங்கு வந்து போகவேண்டும். நிலையாகவும் இருந்து போகவேண்டும்.

தொடர்ச்சி 3-ம் பக்கம்

### தணியார்பாதம் வந்தொல்லைதாராய்

திருச்சிற்றம்பலம்.

பணிவார் பிணிதீர்ந் தருளிப் பழைய அடியார்க்குன்
அணியார் பாதங் கொடுத்தி யதுவு மரிதென்றல்
திணியார் மூங்கி லனையேன் வினையை பொடியாக்கித்
தணியார் பாதம் வந்தொல்லை தாராய் பொய்தீர்மெய்யானே

திருச்சிற்றம்பலம்.

அரசியல் அலை

## சீனத்துச் செல்வமும் சிநேகிதமும்

### இலங்கைக்கு இன்றியமையாதவை!

### பொதுவுடைமையினரின் குதூகலம்?

நானுங் கூட நானுங் கூட என்ற ஒரு விகடத் துணுக்கு விளையாட்டில் உண்டு. அதுபோலச் சீனத்தில் விளையும் அரிசி பெறச்சென்ற அரசாங்கப்பகுதியாரின் அநுகூலத்துக்குப் போதுவுடைமையினரும் பொறுப்புடையவர்களாகத் தாமாகவே கருதுகிறார்கள். ஆர் முயற்சித்தாலும் அரிசி ஆகட்டும்!

சீனத்துச் செல்வம் மாத்திரமன்று அந்நாட்டு நம்பிக்கையும் சினேகபான்மையும் வேண்டுமென்று சீனத்து மக்களும் இலங்கையர்களும் பெரிதும் விரும்புகிறார்கள். அமைச்சர்களும் விரும்புகின்றார்கள்.

ஆனால் முற்றிலும் மனப்பூர்வமானவையா அன்றி உள்ளத்தில் ஒன்று புறத்தொன்று என்ற முறையிலா என்பதைச் சொல்லமுடியாது. இதற்கிடையில் அரசியற்கட்சியினர்களும் தாங்கள் தங்கள் கட்சி மேம்பாட்டுக்காகத் தலையிடுகின்றார்கள்.

பொதுவுடைமையினர் சீனதேசத்தைத் தங்கள் நாடாகக் கருதிக்கொண்டு அரசியல் ஆதிக்கஞ் செலுத்த முன்வந்திருக்கிறார்கள். பொதுவாக இங்குள்ள பொதுவுடைமையினர் தாம் ருசிய சீனப் பிரதேசங்களின் சொந்தக்காரர் என்ற முறையில் இறுமாப்புடன் அரசியற் பிரசாரஞ் செய்கின்றார்கள்.

ஆனால் இலங்கையர் வேண்டுவது கட்சிமேம்பாட்டையல்ல. மக்கள் அனைவரும் தங்கள் ஆசிய பண்பாட்டை அழியாது காப்பாற்ற வேண்டியவர்களாவர் என்பதையே அதற்காக அமைச்சர்கள் அரசியற்கட்சி விபரீதமின்றி ஆலோசிப்பார்களாக.

### உலகத்தில் பெரிய முட்டை

சில வருடங்களுக்கு முன் லங்காஸ்யாவில் ஒரு கமத்திலுள்ள கோழி ஒன்று ஒரு பெரிய முட்டையை இட்டது. ஆனால் மூன்று நாட்களுக்குப் பின அக்கோழி இறந்துவிட்டது. அம் முட்டையின் நீளம் $12\frac{1}{2}$ அங்குலமும் 9 அங்குலச் சுற்றளவுமாகும். இது ஏறக்குறைய $\frac{3}{4}$ இறாத்தல் நிறையுடையதாம்.

## சைவ சமயம் தழைக்க வழி

( திரு. இ. ந. சுப்பிரமணியம் சாவகச்சேரி )

"புராண படனமும் காலப் போக்கும" என்ற தலைப்புடன், மீசாலை, சைவமகாசபைக் காரியதரிசி ஸ்ரீ இ. வேலுப்பிள்ளை உபாத்தியாயர் அவர்கள் 12.9.52-ல் வெளியாய இந்துசாதனத்தில் எழுதிய கட்டுரை உண்மையில் எமது சைவாபிமானிகளை விழிப்புறும்படி தூண்டியிருக்கும். ஊர்கடோறும சைவமகா சபைகளை நிறுவிப் புராணபடனமும் சமய வாழ்க்கைத் திருத்தமும் புரிய வேண்டும்என்று அவர் காட்டியுள்ளார்.

### கிராமமுன்னேற்ற இயக்கம்

இத்தகைய கைங்கரியங்கள், அவ்வவ்வூர்களிலுள்ள சமூக நிலையங்களும், கிராம முன்னேற்றச் சபைகளும் இதற்கென நியமிக்கப்படும் நிர்வாக சபைகள் மூலம் — சேர்ந்து — சாதிக்கத் தக்கவைகள். ஆங்காங்குள்ள வாசிகசாலைகள் அவ்வவ்வூர்களிலுள்ள மதப் பிரசாரங்களுக்காக இரவில் உபயோகிக்கப்படலாம்.

சமயாசாரியரைக் கண்டுபிடித்துப் புராண வகுப்புக்கு நியமிக்கினும், படிப்பதற்கு மாணவரைக் காண்டல் இக்காலத்திற் கஷ்டமாயிருக்கிறது. இதற்குச் சமயப்பிரசாரக் கூட்டங்கள் இன்றியமையாதனவாகும்.

மதக்கல்விக்கு உரிய தானம் கொடுக்கப் படாமையினாலே தான், இன்று கொம்மியூனிசம் அல்லது பொதுவுடைமை (Communism) என்று கூறப்படும் சமய நம்பிக்கையற்ற அரசியல் இயக்கம் உருவாகிறது. கல்லூரிகளும் கலாசாலைகளுமே இதற்கு உற்பத்தி நிலையமாகக் காணப்படுகின்றன.

ஆசிரியர்கள்பலர் இக்கொள்கையை மதிப்பவர்களாக இருக்கிறார்கள். ஆகவே திரு. இ. வேலுப்பிள்ளை அவர்கள் வற்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

### காச நோயாளர்களுக்குக் கருணை கூருங்கள்

காங்கேசன்துறைக் காசநோயாளர்களிற் சைவசமயிகளாயுள்ளோர் காசநோய் தங்களுக்கு விளைக்கும் கவலையை நீக்கும்பொருட்டுப் படிப்பதற்கு நல்ல சைவ நூல்களைத் தந்துதவும்படி பொதுசனங்களை வேண்டுகிறார்கள் என்றும் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையையும் அவ்வாறே கேட்டிருக்கிறார்களென்றும், காசநோயாளர் சங்கக்காரியதரிசியின் வேண்டுகோளின்படி சைவபரிபாலனசபைக் காரியதரிசி திரு. அ. அருளம்பலம் அறிவிக்கின்றார். அன்பளிப்பாகப் புத்தகங்களை உதவ விரும்பும் சைவசீலர்கள் அவற்றை திரு. அ. அருளம்பலம் காரியதரிசி சைவபரிபாலன சபை என்று விலாசமிட்டு அனுப்பும்படி தயவாய் வேண்டப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அர்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம் அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஆண்டு ஐப்பசி மீ ௫ ௨ செவ்வாய்க்கிழமை

## பல்கலைக் கழகப் பழக்க வழக்கங்கள்

இக்காலக் கல்வி முறை எவ்வாறு நேர்சீரிலாதிருக்கின்றதோ அவ்வாறே மாணவர்களும் ஒழுக்க முறையில் இழுக்குடையவர்களாகக் காணப்படுகின்றனர் என்று அறிஞர்கள் பலர் கருதுகின்றனர். பன்முறை பகிரங்கமாக எச்சரிக்கை செய்திருக்கின்றனர். அண்மையில் இலங்கைப் பல்கலைக் கழக அதிபரும் அக்கழக மாணவர்களின் பழக்க வழக்கங்கள் கவலைக்கிடமானவை என்றெடுத்துக் காட்டி அன்னார் நடந்துகொள்ள வேண்டிய முறைகளையுங் கற்பித்திருக்கின்றார்.

பல்கலைக் கழகம் மாத்திரமன்று எல்லாக் கல்விச் சாலைகளும் இத்தகைய குற்றத்துக்குள்ளாகக் கூடிய நிலைமையில் மாணவர்கள் நடந்துகொள்கின்றார்கள் என்று ஆசிரியர்களே அடிக்கடி குறைகூறியுள்ளார்கள். இந்நிலைக்குக் காரணர்கள் யார், எதுவாகிய சந்தர்ப்பங்கள் எவை என்றாராய்ந்து பார்க்குமிடத்து முற்காலக்கல்வி முறையில் முன்மாதிரியாய் இருக்கக்கூடிய நல்லொழுக்க முறையை இக்காலத்தில் ஏற்றுக்கொள்ளாது மாணவர்களுக்குப் பரிபூரண சுதந்திரம் அளித்துவிட்டமையும் சமயக் கல்வி தக்க வகையில் ஊட்டப்பெறு திருத்தலுமே என்று சொல்லவேண்டும்.

பழையனவற்றைப்பழித்துக் கழித் தொதுக்கியது மாத்திரமன்று, புதியனவற்றை புத்தி சித்தமாக ஆராயாது பொழுதுபோக்காகப்போற்றிவந்தமையே இந்நாளில் அல்லல்களுக்கெல்லாம் அடிப்படையான காரணம். கற்பிக்கப்படுவோர் கற்பிக்கப்படாதோர் என்றிருவகையினரின் தன்மையும தமிழ்ப் பண்பாட்டிலமைந்துள்ளன. வழிபடுவோரே கற்பிக்கப்படுவோரென்றும் படிறு பலவுரைப்பாரும் திரிதருநெஞ்சத்தாரும் தீயவையோர்ப்பாரும் கற்பிக்கப்படாதோரென்றும் கோடன்மரபில் மாணாக்கன் ஆசானை அன்பொடுகெழீஇக் குணத்தொடு பழகிநிற்றல் மிக வேண்டப்படுவதென்றும் இலக்கண நூல்கள் எடுத்தியம்புகின்றன. இவ்வாறே ஆசானுக்குமிலக்கணம் வரையப்பட்டுள்ளது. எனவே தமிழ்மக்கள் பண்டை

## சீனு இலங்கை வர்த்தக உடன்படிக்கை

வர்த்தக மந்திரி R. G. சேனநாயக வர்த்தக உடன்படிக்கையின் பொருட்டு ஆலோசனை செய்வதற்குச் சீனவுக்குச்சென்று இம்மாதம் 16ந் திகதி திரும்பி வந்துவிட்டதாகத் தெரிய வருகின்றது. ரப்பர், காரீயம் முதலியவைகள் நீங்கலாக மற்றப் பொருட்களுக்கு வர்த்தக உடன்படிக்கை சீன அரசாங்கத்துடன் தாம் செய்துள்ளதாயும் வர்த்தக மந்திரி கூறுவதாகத் தெரிய வருகிறது.

ரப்பர், காரீயம் முதலிய பொருட்களைப்பற்றிய ஆலோசனை மந்திரிசபையில் ஆலோசனைக்கு விடப்போவதாயும் அறியவருகின்றது.

**************************

## ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

யோகி ஸ்ரீசுத்தாநந்தபாரதியார் அவர்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை (19—10—52) கொழும்புக்குவந்துவிட்டார்கள்

**************************

நாட் பெரியோர் வகுத்த ஒழுக்க நெறியினின்றும் வழுவி நிற்றலே பழிப்புக்கிடமாகின்றது.

காலப்போக்கின்படி ஒழுகவேண்டுமென்று பெற்றாரும் ஆசிரியர்களும் விரும்புகின்றார்கள் எனச் சிலர் சமாதானஞ் சொல்கின்றனர். மாணவர்கள் பலதிறப்பட்ட அநுபவசாலிகளாயிருத்தல் நன்றெனறு ஒவ்வாப்பேச்சுப் பேசுகின்றனர் பிறர். ஒழுக்கமே தமிழ் மரபிற்குரிய நடை. ஆகவே ஒழுக்கந் தவறி நடப்பவர்களைக் கண்டித்து ஏற்றவழிதண்டித்து விடுவது பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்குமுள்ள கடமை. பெற்றார் ஆசிரியர் தங்கள் கடமையைச் செவ்வனே செய்யாது நிற்பதாலேயே பிள்ளைகள் எல்லைகடந்து போகின்றார்கள்.

பிரமச்சாரி சதமர்க்கடம் என்று வயது வராதவர்களைச் சாதாரணமாக இழிவாக அழைப்பது உலக வழக்கம். குரங்குத்தன்மையே கூடாது. ஆனல் அதிலும் கேடான தகாத ஒழுக்கமெனின் சொல்லவும் வேண்டுங்கொல். விகட வேடிக்கை என்ற முறையை விதியாய்க்கொள்ளும் பழக்கம் உயர்ந்த கல்விக் கழகங்களில நிலைபெற்று விட்டதை என்னென்றுரைப்போம். ஆசானையும பெரியோரையும் சிந்தித்து நீதியற்ற முறையில் நடத்துவது உயர்தரக் கல்விக்கழகென நினைப்போர் தம் மனப்பான்மைதான் என்னையோ?

ஆகவே பல்கலைக்கழகங்களிலும உயர்தரக் கலாசாலைகளிலும் அறிஞர்கள் சமய போதகர்கள் அடிக்கடி [illegible] நெறிப் பிரசாரஞ் செய்[illegible] றியமையாது வேண்டப்படுகின்றது.

## சர்வகலாசாலை மாணவர் ஒழுக்கம்

பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா, இந்தியா, மலாயா, அமெரிக்கா ஆகிய தேசங்களிலுள்ள சர்வகலாசாலை மாணவருடைய ஒழுக்க நிலைகளைத் தமக்குத் தெரியுமென்றும் இலங்கைச் சர்வகலாசாலை மாணவருடைய ஒழுக்க நிலையை அவர்களுடைய ஒழுக்க நிலயுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இலங்கை மாணவருடைய நிலைமை மிகத் தாழ்ந்ததாயிருக்கின்றதென்றும் கூறுகின்றார் சேர் ஐவர்ஜென்னிங்ஸ்.

## இந்தியாவிற் செவிடர்

இந்தியக் கல்வி மந்திரியால் செவிடர்களைக் கண்காணிக்கும் பொருட்டு நிபுணர்குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இக்குழு செவிட்டுத் தன்மை உண்டாகும காரணங்களையும் அவற்றைத் தடுப்பதற்கேற்ற வழிவகைகளையும ஆராய்ந்து கூடியவரை செவிடுண்டாகாமற் பாதுகாப்பதோடு செவிடர்களாய் இருப்பவர்களுக்குக் கல்வியூட்டுமாம்.

## அணிந்துரை அரங்கம்

### வளர்பிறை

நாவுக்கல் கவி வெ. இராமலிங்கம்பிள்ளையதும் ஈழத்து அரசவை அமைச்சர் திரு. சு. நடேசபிள்ளையதும் அணிந்துரையும் திரு வி. கல்யாணசுந்தர முதலியார் வாழ்த்துரையும் விளங்க அழகுற அச்சிடப்பெற்ற 'வளர்பிறை' யெனும் மகுடங் கொண்ட கவிதைத் தொகுதி தேவரையாளிச் சைவ வித்தியாசாலை திரு. மு. செல்லையா ஆசிரியரால் ஆக்கப்பெற்றது. இதனை வெளியிட்டோர் காந்தி நிலையத்தா ரென்பதே இதன் தேசியப் பிரபையை விளக்குகின்றது. தாய்மொழிப் பற்றும தாய்நாட்டபிமானமும் கவிதைகளிலே மிளிர்கின்றன. வள்ளுவர் வாழ்க்கை நெறிவழி ஒழுகுதலை இந்நூல் எடுத்துக் காட்டாகக் குறிப்பிடுகின்றது.

### இலக்கிய மஞ்சரி

சுன்னாகம் வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகத்தாரால் அச்சிடப்பெற்ற இலக்கிய மஞ்சரி மூன்றாம் புத்தகம் வனப்புமிக்கதாய் விளங்குகின்றது. பொருள் முறையும் செறிவும் விளக்கிக்காட்டும் படங்களும் நன்கமைந்திருக்கின்றன. இதை ஆக்கியவர்கள் பண்டிதர் வ. நடராசனும் திரு. நகை செந்திநாதனும் ஆவர்.

— விலை சதம் 60

திருத்தொண்டர் திருநாள்

## அத்துவித மெய்கண்ட சந்தானாசாரிய முதல்வர்

"பண்டைமறை வண்டாற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டஇரு தயகமல முகைக ளெல்லாங்
கண்திறப்பக் காசினிமேல் வந்த அருட்கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய் மேவு
மெய்கண்ட தேவன்மிகு சைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம்."

திருமுனைப்பாடி நாட்டிலே திருப்பெண்ணாகடத்திலே வேளாளர் குலத்திலகராய் வாழ்ந்த அச்சுதகளப்பாளரென்பார் பிள்ளைப்பேறின்மையால் தங்கள் குலகுருவாகிய சகலாகம பண்டிதரிடம் சென்று தமது குறையை விண்ணப்பஞ் செய்ய, அவர் தேவாரத் திருமுறையிலே கயிறு சாத்திப் பார்த்தார். அப்பொழுது

"பேயடையா பிரிவெய்தும்
பிள்ளையினோடுள்ள நினை
வாயினவே வரம்பெறுவர்
ஐயுறவேண்டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன்
வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத்
தோயாவாந் தீவினையே."

என்னும் பாடல் வந்தது. அப்பாடலின்படி திருவெண்காட்டுக்குச் சென்று முக்குள நீராடிச் சிவபெருமானை வழிபடுமாறு குலகுருவானவர் மதிமொழிகூற, அச்சுதகளப்பாளர் அவ்வாறே மனைவியாருடன் சென்று வழிபாடாற்றி ஓர் ஆண்மகவைப் பெற்றனர். அவருக்குத் திருவெண்காட்டுப் பெருமானுடைய பெயராகிய சுவேதவனப்பெருமாள் என்னும் பெயரைச் சூட்டினர்.

திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்த பிள்ளையாருடைய நன் [illegible] தம்மில் [illegible] யாக வளர்த்து வந்தார். பிள்ளையார் மூன்றாட்டைப் பராயத்தராய பொழுது ஒரு நாள் பரஞ்சோதி முனிவர் ஆகாயத்திலே சென்ற பொழுது அவருடைய செலவு தடைபட்டது. அப்பொழுது முனிவர் கீழே இழிந்து பிள்ளையாருடைய பக்குவத்தையறிந்து அவருக்கு மெய்யுணர்வளித்து, சத்தியஞானதரிசனிகளாகிய தமது குருவின் பெயரை மெய்கண்டார் எனத்தீக்ஷாநாமமாகக்கொடுத்துச் சென்றார். மெய்கண்டார் தாம் கண்ட மெய்ப்பொருளை முன்னர் சகலாகம பண்டிதர் என்னும் காரணப் பெயருடன் தம் குலகுருவாயிருந்த அருணந்திசிவாசாரியார் முதலிய நாற்பத்தொன்பது மாணவர்களுக்கு உபதேசஞ் செய்து சிவஞானபோதம் என்னும் தனிப் பெருமைவாய்ந்த மெய்ப்பொருள் நூலைத் தமிழிலே தந்தருளினார். இப்பெரும் நூல் தரும் மெய்ப்பொருளை அருணந்திசிவாசாரியார் தமது குருமூர்த்தியின் திருவுள்ளப்படி விரித்துச் சிவஞானசித்தி செய்தருளினர்.

இவ்வாறு அருளொளி பரப்பி விளங்கிய மெய்கண்ட வள்ளல், ஐப்பசி மாசச் சுவாதி நட்சத்திரத்தில் இறைவன் திருவடியில் இரண்டறக் கலத்தலாகிய அத்துவித முத்தி எய்தினர்.

"பொய்கண்டார் காணாப்
புனிதமெனு மத்துவித
மெய்கண்ட நாதனருண்
மேவுநாளெந்நாளோ?"

## செய்தித் திரட்டு

=O=

பாகிஸ்தான் பட்டாணியராயிலேன் பாகிஸ்தான் படைகளாயிலேன் காஷ்மீரைத் தாக்குமேயானால் இந்தியா தனது முழுச்சக்தியுடன் அவர்களை எதிர்க்குமாம்!

X X X

தென்னாபிரிக்க சிக்கலைத் தீர்க்க ஐக்கிய தேசீய நாட்டுச் சபைக்கு ஏலாமல் வருமாயின் அதன் மேல் அச்சபை நிகழ்த்தற்கு நியாயமில்லை!

X X X

லண்டனிலுள்ள இலங்கைப் பிரதிநிதிகாரியாலயத்தில்காலமாய பிரதமர் டி. எஸ். சேனநாயகவின் உருவப்படமொன்று வைக்கப்படும்.

X X X

கார்த்திகை மாதம் 20-ந் திகதி மாலை 5 மணிக்கும் இரவு 12 மணிக்குமிடையில், புதிய அரிசிப் புத்தகங்களை விநியோகிப்பதற்காக இலங்கை முழுவதும் ஆட்கணக்கெடுப்பு நடைபெறுமென அறியவருகின்றது.

X X X

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் கடந்த 3 மாதங்கட்குள் 34,000 ரூபாய் பெறுமதியான பொருட்களைக் களவுகள் மூலம் இழந்திருக்கின்றதாம்.

X X X

இந்திய அரசாங்கம், துவிச்சக்கரங்கள், வானொலி, முதலிய பொருட்கள் உட்பட 61 பொருட்களுக்கு, நிதிவருடப் பிற்பகுதி ஆறு மாதங்கட்கும் இறக்குமதித் தடை விதிக்குமாம்.

X X X

இந்தியாவுக்கு ஆறாவது முறையாக 50 000 தொன் அரிசி கொடுப்பதற்கு சீன அரசாங்கம் இம்மாதம் 13ந் திகதி, ஒப்பந்தஞ் செய்திருக்கிறதாம்

X X X

டதுளை நீதிபதிக் கோட்டின் முன் 5281 இறாத்தல் கஞ்சா, நீதிபதியின் உத்தரவுடன் தீ வைக்கப்பட்டதாம். அநேக கஞ்சாப் பிரியர்கள் அதனின்றும் எழும்பும் புகையைப் பிடிப்பதற்காக கோட்டருகில் அடிக்கடி நடமாடினராம்.

X X X

இவ்வருடம் கடந்த எட்டு மாதங்களுள் 5 151 சலனவாகனங்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டிருப்பதாக அறியவருகிறது.

## எச்சரிக்கை!

பொதுநிறக் கறுவல். 35 வயசு வரையில் மதிக்கலாம். தலை "கிறப்" பெரிய மண்டை. தடித்த சரீரம். தனக்குப் மோசபத்து நேர்ந்ததெனறு சொல்லி நடித்து ஆட்களை ஏமாற்றிப் பணம் பறிக்குங் குணமுடையவர். தான் வியாபாரி மூலையில் இருப்பதெனவும் கண்டி நாட்டில் தனக்குக் கடை உண்டெனவும் சொல்லி ஏமாற்றுவதுதான் வழக்கம். தன் பெயர் சிவசுப்பிரமணியமாம். விசாரித்து அறிகிற வரையில் இருப்பது பருத்தித்துறையைச் சேர்ந்த ஓடைக்கரை யெனவும், "பப்பான்" என்னும் பட்டப் பெயருண்டு எனவும் அறிந்தேன். ஆங்கிலமுந் தமிழுங் கலந்து வாக்குவன்மையாகப் பேசும் ஆற்றலுண்டு. இவரை யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலும் பருத்தித்துறை பஸ் நிலையத்திலும் இடையிடையே காணலாம். இவரைப்பற்றி அவதானமாய் இருங்கள்.

இங்ஙனம்

ஏமாந்தவருளொருவன்

யாழ்ப்பாணம்
12—10—52.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

## வேத சிவாகமம் வேண்டாத வித்துவான்

மக்கள் வாழ்க்கை தக்கவாறு செல்லுதற்கு இன்றியமையாது வேண்டப்படும் ஒளி நெறியைக் காண்பதற்கு உதவக்கூடியவற்றைத் திருக்குறளிலே தெரிக்கப் பெற்றவாறு கூறும்பொருட்டு வித்துவானவர்களை அன்பாய் வேண்டினேன். பின்னர் அறிந்தவாறறை அறிந்தபடி அன்புடன் எழுதினேன். வித்துவானவர்களோ (விபரீத விளக்கம்கொண்டவராய்) மயக்கத்தையே மேன்மேலும் விளைக்கக் கூடிய பதர்மொழிகளை வாரியெறிந்து மகிழுகின்றார். அன்னாருக்கு அடியேன் இனிக் கூறத்தக்கது யாதுமில்லை.

ஆயினும், இந்துசாதன வாசகர்களின் பொருட்டு இறைவன் திருவருள் வழிநின்று ஒரு சில கூறுவேன். இந்துசாதன வாசகர்களும் ஏனைய சைவச் சகோதர சகோதரிகளும் இனி யாயினும் துயில் நீத்து வித்துவான், பண்டிதர் புலவர், பீ. ஏ. எம். ஏ, பீ. எஸ். ஸி எம். எஸ். ஸி என்பனவும் பிறவுமாகிய பட்டங்களைப் பெற்றவுடனே எல்லா மறிந்தோராய் ஏனையோரை ஏளனஞ்செய்து இறுமாந்து நிற்கும் எம சகோதர சகோதரிகளின் பரிதாப நிலையை உற்று நோக்கி, எம் கடனுயமைவது செய்ய முனைவருவார்களாக. என் இவ்வாறு கூறியழைக்கின்றேனென்பதை இன்னே காண்க.

**ஔவைகூறினும் தவறுதவறே!** என்று அஞ்சா நெஞ்சர் போல் இறுமாந்து கூறி நிற்கின்றார் எம் வித்துவச்சகோதரர். அவர் கூற்றுக்கு ஆதாரமாயுள்ளவை "உடலெங்கும் நெற்றிக் கண் காட்டினும் உன் கவியிலுள்ள குற்றம் குற்றமே என இறைவனுடன் வாதிட்டான் ஒரு தமிழன் என்பதனை அன்பர்க்கு உணர்த்த விரும்புகிறேன்" என்று தொடங்கி கூறும் குதர்க்க மொழிக்குளவகளேயன்றி அறிஞராவார் எடுத்தாளும் தருக்கமொழிகள் எவையுமேயில்லை! ஔவைப்பிராட்டியார் கூற்று எவ்வாறு தவறாயிற்றென்று எடுத்துக் காட்டவில்லை? அப்பெருமாட்டியாருடைய கூற்றை இவ்வாறு எள்ளிநகையாடிய அறிஞரை இற்றைவரையில் யான் அறிந்திலேன! ஆனால் அம்மூதாட்டியாருடைய முதுமொழிகளை எடுத்துக்காட்டுக்களாய் எடுத்தாளும் பெரியோர் பலருளர். அவர்களுள்ளே சைவப் பேரறிஞராகிய திரு. சு. சிவபாதசுந்தரப் பெரியார் ஒருவராவர். அவர் சைவபோதம் இரண்டாம் புத்தகம் நாலாம் பக்கத்திலே "... இப்படியாக ஞானிகளாலும் கடவுளாலும் அருளிச் செய்யப்பட்ட சைவசமய நூல்கள் பல. பலவாயிருந்தாலும் அவைகள் சொல்லும் உண்மை ஒன்றேயாம்" என்று கூறி அக்கூற்றுக்கு ஆதாரமாக

"தேவர் குறளும் திருநான்
 மறைமுடிவும்
மூவர் தமிழும் முனி
 மொழியும் — கோவை
திருவாசகமுந் திருமூலர்
 சொல்லும்
ஒருவாசகமேன் றுணர்"

என்னும் நல்வழி வெண்பாவை எடுத்துக் காட்டியிருக்கின்றார். இஃதிவ்வாறிருப்ப, இந்த இளம் வித்துவானவர்களின் மதிச்சிறப்பை என்னென்று கூறுவோம்?

"பகுத்தறிவிற் கொவ்வாப் பண்பாட்டினை வளர்க்கும் வேத சிவாகமங்களை ஒரு சிலர் போற்றலாம். ஆனால் பழியஞ்சி வாழ்வோனுக்கு அவை மிகுந்த அருவருப்பிற் கிடமானவை" என்று தொடங்கி வெறிகொண்டு மதிமயங்கினராய்ப் பல வேதசிவாகமநிந்தை சைவநிந்தைக்குவைகளைக் குவித்துப் பேரறிவமிகுந்த பெரியோனெனக் கெம்பீரமாய்ச் செல்கின்றார். என்னே மதிவளச் சிறப்பின் மாண்பு! இவர் சைவ சமயத்தவர்தானோ?... இத்தகையோரும் தம்மைச் சைவ சமயிகளென்று சொல்லிவிடுவார்களென்றுன்னியே "வேத சிவாகமங்களை இறைவாக்காகவும், சைவசமய முதல் நூல்களாகவும் ஏற்றுக்கொள்ளுகின்றேன்" என்ற உறுதிமொழி கூறுமாறு சைவபரிபாலனசபையார் தங்கள் சைவபரிபாலனசபை அங்கத்துவ விண்ணப்பப் பத்திரத்திலே அமைத்திருக்கின்றனர்போலும்? இத்தகைய நவீன சைவப்பண்பாடுடைய கல்விக்கடல்களாய்ப் பொதுவுடைமை முதலிய புண்வாய்ப்பட்ட மூர்த்தம் எம் சகோதரர் பற்பலரிருக்கின்றனரென்பதைச் சைவ உலகு அறியவேண்டுமென்னும் விருப்பினாலேயே (வித்துவானவர்களது) இவ் வேத சிவாகம நிந்தையை இந்துசாதனஆசிரியர் வெளியிட்டிருக்கின்றாரென்று நம்புகின்றேன்.

"சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டு அருளிச் செய்த முதனூல்கள் எவை? வேதம் சிவாகமம் என்னும் இரண்டுமாம்" என்று சைவவினாவிடை இரண்டாம் புத்தகம் 18 ம் பக்கத்திலே நாவலர் பெருந்தகை தந்திருப்பதை எம் வித்துவச் சகோதரன் கண்டிலர்போலும்? "மறைநான்குமானாய் ஆறங்கமானாய்" "வேதநான்கினும்மெய்ப்பொருளாவது நாதனாம நமச்சிவாயவே" என்பனவும், பிறவுமாய்ப் பரந்து விளங்கும் சைவத்திருமுறைத் திருப்பாக்களை எம் இளம் வித்துவான் கண்டிலர் போலும்?

"வேதநூல் சைவநூ லென்
 றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின்
 விரிந்த நூல்கள்" (சி.சி.)
"வேதாந்தத் தெளிவாஞ்
 சைவ சித்தாந்தத்
திறனிங்குத் தெரிக்கலுற்றாம்"
 (சிவப்.)

என்பன முதலிய சைவசித்தாந்த சாத்திர அறிவுரைகளைக் கொள்ளார்போலும் எங்கள் வித்துவான்?

இவைஇவ்வளவிலிருக்க, சென்ற செவ்வாய் 30-9 52ல் வெளிவந்துள்ளம் இந்துசாதன இதழிலே "இருள் சேரிருவினையுஞ் சேரா இறைவன் — பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு" என்பதில **சேரா, புரிந்தார்,** என்னுஞ் சொற்களைக்கவனிப்போம். சேரா என்பது எதிர்காலம்; புரிந்தார் என்பது இறந்தகாலம்; எனவே இறைவன் பொருள் சேர் புகழ் முன்னர்ப் புரிந்தார்மாட்டு இருள் சேரிருவினையுஞ் சேரா — இனிச் சேரா — என்று கொள்ளலே பொருத்தமுடைத்து" என்று இலகுவான இலக்கண விதியாலெடுத்துக் காட்டி, சிவஞானபோதம், சிவஞானபாடியம், திருவாதவூரடிகள்புராணம் ஆகிய இம்மூன்றிலும் என்கூற்றுக்களுக்கு ஆதாரங்களும் எடுத்துக் காட்டினேன். சைவத் தமிழ் மக்களாய் இவற்றை விளங்கும் ஆற்றலுடையோர் என்கூற்றுக்களை ஒப்புக்கொள்வர் ஏனையோர் அறிந்தார் வாய்க் கேட்டறிதல் முறை. ... "கொடிறும் பேதையுங் கொண்டது விடா" என்றபடி நிற்றல் பிழை.

"அறனறிந்து மூத்த
 வறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்"

என்னும் பொன்மொழிகளை எம் வித்துவச் சகோதரனும அவர்போன்ற ஏனைய சகோதர சகோதரிகளும் சிரமேற்கொண்டொழுகுமாறு அன்பாய் வேண்டுகின்றேன். சுபம்.

ஒருபொல்லாப்புமில்லை.
எப்பவோமுடிந்தகாரியம்.

திருக்குறள்-
மாணவன்.

வண்ணை, 12-10-52.

## குறளுரையும் கோபாவேசமும் ?

கல்விக் கழகப் பகுதிக்கமைவாகுமென வெண்ணிப் பண்டிதர் த. வடிவேலு அவர்களின் கட்டுரைகள்சிலவற்றை இந்துசாதனத்தில் வெளியிட்டோம். அவற்றுட் சில திருக்குறளுக்கு உரைவழியாலாயன. இவ்வுரை எவ்வாற்றானும் இதுவரை வெளிவந்த உரைகளை விளக்கிக்கூறுமுகத்தானே அன்றி அவற்றின் வேறுபட்டுப் புத்துரை வகுக்கும் வழியானோ அமையவில்லை என்று ஒரு நேயர் எமக்கு எடுத்துக்காட்டிச் சில குறிப்புக்களையும் எழுதியுள்ளார்; அவற்றையும் பிரசுரித்தோம். இருந்தும் கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டாற் போன்று அனுவசியமான அருவருக்கத்தக்க சில கூற்றுக்கள் எழலாயின. எனவே இக்கண்டனக் கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிடாதொதுக்குகிறோம்.

திருக்குறள் வாழ்க்கையியல் வகுத்து ஒழுக்கங் கற்பித்து இறை நெறிநிற்க வழிகாட்டும ஒரு உயரிய நூல். ஆகவே அதற்கு உரை வரைவதற்கு **'அருப்பயன் ஆயும் அறிவினர்'** அன்றி மற்றையோர் முனைவரார். அன்னார் **சொல்லிற் பெருப்பயன் இல்லாத சொல்'** ஆனறியும தாம கூறியவற்றை மறுத்துரைப்பார்பாற் சினங்கொள்ளார்; வெகுண்டு வேண்டாதன விளம்பார்; எவ்வகையானும் இறைநூல்களை இழிவுபடக்கூறார்.

பண்டிதர் வெகுண்டெழுந்து வேதசிவாகமங்களைப் பலபடக் கூறிவிட்டார் என்று நாமும் வெதுளமாட்டோம்!

பண்டிதர் சைவரா? அன்றி எம் மதமுஞ் சம்மதமில்லாத தனிப் பேர்வழியா? என்று நேயர்கள் வினவுகின்றார்கள். மதங் கொண்டாரோ கொள்ளவில்லையோ சிவ நிந்தை செய்யுஞ் சிந்தையுடையார் இவர் என்பது வேதசிவாகமங்களைப் பற்றிய இவரின் அபிப்பிராயங்களிலிருந்து வெளியாகின்றது. முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் இறை கொடுந்தமிழாற் கோபாவேசங்கொள்வாருக்கும் நற்புத்தி புகட்டுவார் என்றே பண்டிதர் அவர்கள் கண்டனத்தைப் பலரறியப் பிரசுரித்தோம். — ப-ர்.

### அடைவு நகை விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்கிழக்கு கலட்டி 576/5 நம்பர் கடையில் அடைவு பிடிக்கும் தா. சி. குமாரசாமி அன்ட் ஸ்ரீமதி தா சி. சோமசுந்தரம் அவர்களுடைய கடையில் 1951–ம் ஆண்டு மே மூ தொடக்கம் 1952 ம் ஆண்டு செப்டம்பர் முடிய உள்ள தவணை தப்பி எடுபடாமல் இருக்கும் நகைகளை 1952-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிதொடக்கம் மேற்படி இடத்தில் என்னும் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

[illegible]
வெந்தீஸ் மேஸ்தர்

### தெல்லிப்பழை கிழக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை பொன்விழா

—0—

இவ் வித்தியாசாலையின் ஐம்பதாண்டுப் பூர்த்தியை நினைவுறுதற்காக வுை பொன்விழா 19-ந் திகதி (4-10-52) சனிக்கிழமை பிற்பகல் 6-30 மணியளவில் வுை வித்தியாசாலை மண்டபத்தில் திரு. சு. நடேசன் அவர்கள் தலைமையிற் கொண்டாடப்பட்டது.

அத்தினத்தில் பிரம்மஸ்ரீ க. சுந்தரமூர்த்திஐயர் அவர்களின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பெற்ற பாலர்பகுதி மண்டபத்தைத் திருவாளர் மு. இராமுப்பிள்ளை அவர்களும், திருவாளர் மு. இராமுப்பிள்ளை அவர்களால் அன்பளிப்பாக அமைக்கப்பெற்ற புதிய வாசிகசாலை மண்டபத்தைத் திரு. சு. நடேசன் அவர்களும் திறந்துவைத்தனர். ஸ்தாபகர் பிரமஸ்ரீ க. சுந்தரமூர்த்தி ஐயர் அவர்களின் உருவப்படத்தை திரு. சரவணமுத்து அவர்களும் திரு. கெ. ஆறுமுகச் சட்டம்பியார் அவர்களின் உருவப் படத்தை திருமதி. தியாகராசா சிவநாயகி அம்மையார் அவர்களும் திறந்து வைத்தனர்,

முகாமைக்காரர் திரு T. T. ஜயரத்தினம் அவர்களின் வரவேற்புரையின்பின் காரியதரிசி தனுகிகாரிகளின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பெற்றன. பழைய மாணவர்களாகிய திரு. அ. சரவணமுத்து அவர்களும், திருமதி தியாகராசா சிவநாயகி அம்மையாரவர்களும தங்கள் பழைய அனுபவங்களை யொட்டிப் பேசினர். பின்னர்,

### அளவெட்டியில் யோகிசுத்தானந்தபாரதியாருக்கு வரவேற்பு

அளவெட்டி சைவவாலிபசங்கம், சனசமூகநிலையம், தமிழ்க் கலையன்றம் முதலாய சங்க அங்கத்தினர்களும் ஆசிரியர்களும், வைத்தியர்களும், இளைப்பாறும்உத்தியோகத்தர்களும் யோகிஅவர்களைத் தகுந்த முறையில் உபசரித்தற்காக அளவெட்டி அன்பர்களிடம் பணஞ்சேர்க்கவேண்டுமெனவுங் கூட்டம் அளவெட்டி கும்பழாவளை விநாயகராலயத் திருவீதியில் அல்லது மஹாஜன சபை வாசிகசாலை மண்டபத்தில் நடாத்துவதெனவும் தீர்மானித்தார்கள். திரு. செ. மயில்வாகனம்அவர்களைத் தலைவராகவும் திருவாளர்கள் : த. நடராசா, பண்டிதர் க. நாகலிங்கம், என்போரைச் செயலாளராகவும் திரு. கு. பொன்னையா அவர்களைத் தனாதிகாரியாகவும், திருவாளர்கள்: R. அம்பலவாணர், R. முருகேசு, த. சின்னப்பு என்போரை அங்கத்தவர்களாகவுங்கொண்ட வரவேற்புச் சபையுமொன்று நிறுவப்பட்டது.

திரு. M. சின்னத்தம்பி அவர்கள் B. A, (Hons) பாடசாலையும் சமூகமும் என்னும் விடயம் பற்றிச் சொற்பொழிவாற்றினர். திருமதி. சண்பகம் — சேஷாத்திரி அவர்களின் இனியகானத்தோடுபாடசாலை மாணவர்களது இசை நடனத்துடன் விழா 10 மணியளவில் நிறைவெய்தியது.

## ஒழுங்குபடுத்தப்பெற்ற வாழ்க்கை

( முதலாம்பக்கத் தொடர்ச்சி )

**சமாதானத்திற்குச் சாதனம்.**

யுத்த மேகங்கள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்கும் இக்காலத்தில் சமாதானம இருட்டறையிற் பூட்டி வைக்கப்பட்டிருக்கின்றது. ஆச்சிரமமாகிய சூரியன்தான் பூட்டையுமுடைத்து இருட்டையும் போக்கிச் சமாதானத்தை விடுதலை செய்யக்கூடியவன். இச்சிறிய ஆச்சிரமக் குடில் மாடமளிகைகள் நிறைந்த உலகின் இருளை எப்படிப் போக்குமென்று நீங்கள் கேட்டறியலாம். ஒரு சூரியன் உலகம் முழுவதையும ஒளிபாக்குவதெப்படியோ அப்படியே ஒரு சிறு ஆச்சிரமமும் உலகத்துக்கு வழிகாட்ட முடியும். ஆச்சிரமம தனது ஒளிக்கிரணங்களைச் சரியாக உலகத்திடையே செலுத்தினால் சமாதான ஒளி நிலவுவது நிச்சயம். ஆதலால் இவ் வாச்சிரமத்தைப் போற்றிக்காப்பது எங்கள் ஒவ்வொருவரதும்கடமையாகும். எங்கள உடல், பொருள், ஆவியில் ஒரு சிறு பகுதியை நாம் ஆச்சிரமத்துககாகத் தியாகஞ் செய்வோமாயின் இது செல்வம் நிறைந்த ஸ்தாபனமாகிவிடும்.

ஆச்சிரம வாழ்க்கையென்பது ஒழுங்குபட்ட வாழ்க்கையையே குறிக்கும். ஒழுங்குபட்ட வாழ்க்கை ஒவ்வொருவருக்கும் உரியதே. ஆதலால் ஒவ்வொருவரும் ஆச்சிரம வாழ்க்கையை மேற்கொள்ளுவதவசியம். ஆச்சிரமம் ஒழுங்காக நடைபெற்றால் இங்கு வருபவர்கள் நல் வாழ்க்கையைப் பின்பற்றமுடியும். நமது தேசத்தின் கலாசாரம் குருகுலங்களாற்றான் பாதுகாத்து வளர்க்கப்பட்டு வந்தது. இனி மேலும் குருகுலங்கள், ஆச்சிரமங்கள ஏற்பட்டாற்றான் நாம் இன்றைய ஆபத்திலிருந்து தப்பிப் பிழைக்க முடியும். ஆச்சிரமத்துடன் தொடர்பு வைத்துக்கொள்வதன் மூலம் நாளடைவில் நமது சொந்தக் குடிசைகளையே ஆச்சிரமங்களாக மாற்றிவிட வேண்டும். நமது வீட்டிலுள்ள ஆண் பெண் பிள்ளைகள் எல்லோரும ஆச்சிரம வாழ்க்கையை — ஒழுங்கான வாழ்க்கையை — வாழவேண்டும்.

**சுயநலமற்ற சேவை**

ஆச்சிரம வாழ்க்கை சிறிதும் சுயநலமற்றது. பொதுநலமே ஏழைகளின் நினைப்பே அதன் ஆணிவேராகும். கடவுள் நம்மைக காப்பார்; நாம வாழ்வோம் என்ற தெய்வ நம்பிக்கையும், சுயநம்பிக்கையும் ஆச்சிரம வாழ்வுக்கு அடிப்படைகளாகும். இந்த அடிப்படையில சுயநலம தன் வலியிழந்து விடைபெறுவிடும். ஆச்சிரம வாழ்வில் ஒவ்வொரு மூச்சும், ஒவ்வொரு அசைவும் பொது நலத்துக்காகவே இருக்கும். காந்தியடிகள் ஆச்சிரம வாழ்க்கையை வாழ்ந்தார்கள். பல ஆச்சிரமங்களை அமைத்தார்கள். அன்பு, சத்தியம் ஆகிய நெறிகளில் நம்மையும் வாழும்படி அழைத்தார்கள். அதை நாம் ஏற்றோம், அந்த வழியிலே இன்று இந்த ஆச்சிரமத்தில் எவ்வித வித்தியாசங்களையும்விட்டு ஒன்றுகூடியிருக்கின்றோம. இந்த ஆச்சிரமத்தை நாம் வளர்ப்போம. அது நம்மை வளர்க்கும். உலகத்தில் சமாதானம் நிலவும். எல்லாரையும நனமைகளுக்கும் பிரார்த்திக்கின்றேன். எல்லோருக்கும் நன்றி. வணக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக வாழ்க்கையைச் சித்திரிக்கும்

**சுசீலாவின் காதல்**

**யாழ். நகர மண்டபத்தில்**

ஐக்கிய இயக்க உத்தியோகத்தர்களால்

**1952-ம் ஆூ**

**மார்கழி மீ 6-உ சனிக்கிழமை**

சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம நிதிக்காக

மிக விமரிசையாக நடத்தப்படும்

| திறமான | திறமான |
|---|---|
| **தேக்க மரங்கள்** | **ருணிமார்க்ஓடுகள்** |
| பல தினிசுகளிலும் | $13\frac{3}{4}$, 14 இஞ்சிகளிலும் |

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

Std. 2 ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

**யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி**

1918-ம் ஆூ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந் தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியசோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

தற்காலத்திற்கேற்ற
மெருகான நகைகள்

நகைகள் கிடைக்குமிடம்

எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
**நகை**
வியாபாரிகள்
=O=

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு

காரைநகர் கிழக்கு சண்முகம் கைம்பெண் சேதுப்பிள்ளை

—வழக்காளி.

இல. 8510

1. காரைநகர் கிழக்கு சுப்பிரமணியம் கைம்பெண் சின்னம்மா
2. ஷை சுப்பிரமணியம் மகள் சரஸ்வதி
3. ஷை சுப்பிரமணியம் சண்முகலிங்கம்
4. ஷை சுப்பிரமணியம் மகள் இலட்சுமி
5. ஷை சுப்பிரமணியம் இராசலிங்கம்
6. ஷை சுப்பிரமணியம் மகள் இராசம்மா.

1-ம் எதிரி தானுகவும் 2-ம் 3-ம் 4-ம் 5-ம் 6-ம் எதிரிகளுக்குப் பராபரிப்புக்காறியாகவும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் ஆதனங்களுக்குத் தத்துவகாறியாகவும்

—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 8510-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக் காணிகளை 1952-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 15-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் நாலு மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 3511/= இதில் ரூபா 3000/= க்கு 9-1-52 தொடக்கம் 28-3-52 வரைக்கும் வருடமொன்றுக்கு 100க்கு 4 வீத வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் 28-3-52 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 336-66.

காணி விபரம்

1. காரைதீவுக் கோயிற்பற்று வலந்தலை இறை குருஞ்சாய்க்குளி நிலப்பரப்பு 12-ம் செய்பயிர் வான் பயிர்கள் வீடும். எல்லை கிழக்கு இராமு கைம் பெண் கற்பகம், வடக்கு ஒழுங்கை, மேற்கு சுந்தரம் பிள்ளை பெண் தெய்வானை, தெற்கு இராமு கைம்பெண் கற்பகமும் பங்காளரும் கந்தர் முத்தையாவும் இதடங்கலும்.

2. காரைதீவுக் கோயிற்பற்று களபூமி இறை கிங்கிலியவத்தை நிலப்பரப்பு $13\frac{1}{2}$ம் கிழக்கெல்லையில் இருக்கிற கிணற்றில் அரைவாசியும் எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை கைம்பெண் தெய்வானையும் கணபதிப்பிள்ளை சங்கரப்பிள்ளையும் பங்காளரும் வடக்கு கந்தர் மகள் பொன்னம்மா மேற்கு கந்தையா பெண் வள்ளியம்மையும் மறு பேரும் தெற்கு வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை இதடங்கலும் ஆனல் குறித்த கிணற்றில் கிழக்கெல்லையான கணபதிப்பிள்ளை சங்கரப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய தண்ணீர்ப்பங்கும் இறைவாய்க்காற் பாவிப்பும் பிறநீங்கல்.

ஆ. ச. கந்தையா

A. S. Kandiah
Commissioner.

காரைநகர்
30—9—52.
M. 137 21—10—52

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு

சாம்பன் M. தம்பியப்பா கைம்பெண் கண்ணம்மா தானுகவும் 999-ம் இலக்க வழக்கில் M. தம்பியப்பாவினது ஆதனத்துக்கு மரணசாதனத் தத்துவகாறியாகவும்

—வழக்காளி

இல. 7878

1. வண்ணார்பண்ணை கிழக்கு கணபதிப்பிள்ளை ஆறுமுகம்
2. ஷை சுப்பர் தம்பிப்பிள்ளை

—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 7878-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1952-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 10-ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் நாலு மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 1306-00 இதில் ரூபா 1000/= க்கு 12-6-51 தொடக்கம் 11-10-51 வரைக்கும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீதமான வட்டியும் அதன் மேல் முழுத் தொகைக்கும் 11-10-51 தொடக்கம் கொடுக்கும் வரைக்கும் 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 214-60.

காணி விபரம்

வண்ணார்பண்ணை கோயிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கிறை பெரிய வளவு நிலப்பரப்பு-9. அளவின்படி கண்ட நிலப் பரப்பு 9 குளி $\frac{1}{2}$ இதில் 25-2-1941 ல் G. D. வீரசிங்கம் சேவையரால் அளக்கப்பட்ட 1657-ம் இலக்கப் படத்தில் தென்மேற்குப் பக்கமாக 1-ம் துண்டு என்று அடையாளம் பண்ணப்பட்ட நிலப்பரப்பு 2-ம் வீடும் பயிர்களும். இந்தப் பரப்பு இரண்டுக்கும் எல்லை கிழக்கு சொல்லப்பட்ட படத்தில் 2-ம் துண்டு என்று அடையாளம்பண்ணப்பட்ட காத்திகேசு வயித்திலிங்கத்தினுதனம் வடக்கு வயித்திலிங்கம் அப்பையா மேற்கும் தெற்கும் ஒழுங்கை. இதில் சொரியலாய் அரைவாசி.

ஆ. ச. கந்தையா

A. S Kandiah
கொம்மிஷனர்.

காரைநகர்
29—9—52.
M. 136 21—10—52.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

காரைநகர் மேற்கு சாமுத்து மக்கசாமயும பெண்

2. ஷை பொன்னம்மா

—வழக்காளிகள்.

இல. 8670 எதிராக

1. காரைநகர் மேற்கு சுப்பிரமணியம் திருஅருள்
2. ஷை சுப்பிரமணியம் கைம்பெண் தெய்வானைப்பிள்ளை

1-ம் எதிரி சிறுபிள்ளை 2-ம் எதிரி பராபரிப்பும் சங்கரப்பிள்ளை சுப்பிரமணியத்தின் ஆதனத்துக்குத் தத்துவகாரியாகவும்

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்தி க் கோட்டின் 8670-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1952ஆூ கார்த்திகைமீ 14உ வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 3433-99 ம் இதில் ரூபா 2893/= க்கு 3-3-52 திகதி தொடக்கம் 10-7-52 வரைக்கும் வருடம் ஒன்றுக்கு 100க்கு நாலு வீத வட்டியையும் அதன் பின் முழுத் தொகைக்கும் 10-7-52 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 335-77.

காணி விபரம்

காரைதீவுக் கோயிற்பற்று தங்கோடை இறை பாலாஓடை அளவின்படி நெற்பரப்பு 10 குளி $\frac{3}{4}$ எல்லை கிழக்கு கந்தையா பெண் சவுந்தரம் வடக்கு ஒழுங்கை மேற்கு வேலுப்பிள்ளை கைம்பெண் செல்லமுத்து தெற்கு முருகேசு செல்லத்துரை இதடங்கலும்.

ஆ. ச. கந்தையா
A. S Kandiah
கொம்மிஷனர்,

காரைநகர்
1—10—52.
M. 138 21—10—52.

## சம்பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்

### 1953-ம் ஆண்டு தேர்தல் தெரிவுப் பரீட்சை

1953-ம் ஆண்டில் சம்பத்திரிசியார் கல்லூரியில் சேர விரும்பும் மாணவருக்கு அடுத்துவரும் கார்த்திகைமீ 1-ந் உ சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஒரு தெரிவுப் பரீட்சை கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்-பரீட்சைக்குரிய விண்ணப்பப் பத்திரங்கள் கல்லூரித் தலைவர் கந்தோரில் கொடுக்கப்படும்.

T. M. F. லோங்சுவாமியார்
கல்லூரித் தலைவர்.

M. 139 21, 24, 28, 31.

## சைவசமயம் தழைக்க...

முதலாம்பக்கத் தொடர்ச்சி

புறத்தியதொண்டு மிக்கசிரமத்தினிடையேநிறைவேற்றவேண்டியதாகின்றது.

### சமயமும பெண்களும்

பழைய காலத்திலும் இக்காலத்திலேயும் நீதி, நேர்மை, சமயாநுஷ்டானங்கள், இவற்றை மதிப்பவர்கள் ஆண்களிலும் பார்க்கப் பெண்மணிகளே கூடின தொகையினர். இன்னும் தெய்வ வழிபாடு முடித்தன்றி உணவு உட்கொள்ளாத உத்தமிகள் பலர் உளர். ஆகவே இத்தகைய உத்தமிகள் எமது மதக்கல்வியைக் காக்க முன்வர வேண்டும். தேவார வகுப்பு நடாத்த இவர்களே தமது சிறுவர்களைக் கொண்டுவரவேண்டும்.

சிரார்த்த தினங்களில், இறுதியில தேவாரம் படிக்க முடியாது தத்தளிக்கும் சைவ இல்லங்கள் மலிகின்றன. சிரார்த்த முடிவில் பிள்ளைகள் வீட்டின் பின்புறம் ஏக ஐயரே அதையும் படிக்க நேரிடுகிறது.

ஆகவே எமது சமயத்தைப் புநருத்தாரணம் செய்ய நேரமாகிவிட்டது. ஆறுமுக நாவலர் அவதரித்த எம் இலங்கையில் எமது சமயம் குன்றாது மேலும் வளரச் சைவப்பெரியார்களும் சைவத் தாய்மார்களும் பிள்ளைகளும் முற்படவேண்டும்.

"உற்றார் ஆர் உளர்" என்று சிந்திக்கும் மரணக் காலத்தின் முன்பே, நாம் பிறவி எடுத்த நோக்கத்தைச் சமுறச் சிந்தித்துச் சமயவிருத்தி கருதி உழைக்க எங்களுக்கு இறைவன் வலலமையையும் ஆர்வத்தையும் ஈவாராக.

கற்றோர்க்கழகு கசடற மொழிதல்

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna. Jaffna on Tuesday October 21. 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org